94449

உ

(...ழாம் பதிப்பு)

# தொடர்மொழிக்கு ஒரு மொழி

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
53
10. 5. 1950
14805
7. 6. 1968

க. பொ. த. (சா / த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் அரிய நூல்.

வெளியீடு:-
காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகம்,
காரைநகர்.

1-9-88

(...ப்புரிமையுடையது)

(விலை: ரூபா 7-00

தப 9449.

# தொடர்மொழிக்கு ஒரு மொழி

அகராதி- சொற்களை அகர வரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளைத் தெரிவிக்கும் நூல்.

அகதி- போர், உள்நாட்டுக் குழப்பம் முதலியன காரணமாக அல்லலுற்று, உயிரைப் பாதுகாப்பதன் பொருட்டுப் புகலிடந் தேடி வருபவர்.

அகாலமரணம்- வயது முதிர்ந்து இறக்காமல், எதிர்பாராத வகையில் இடையிலே சம்பவிக்கும் மரணம்.

அங்கதம்- வெளிப்படைப் பொருளிற் புகழ்ந்தும், மறைபொருளில் இகழ்ந்துங் கூறுவது.

அசகாயசூரன்- எவரது துணையுமின்றித் தானே தனிநின்று பகைவரை வெல்லும் ஆற்றல் படைத்தவன்.

அச்சவாரம்- பொருளையோ நிலத்தையோ விலைக்குப் பெறுவதற்கான முடிவு ஏற்பட்டதும், வாங்குபவன், விற்பவனுக்குப் பொறுப்பாகக் கொடுக்கும் விலைப் பணத்தின் ஒரு பகுதி.

அஞ்ஞாதவாசம்- பிறர், தம்மை இன்னாரென்று அறியாதவண்ணம் மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியில் வசித்தல்.

அடங்கன்முறை- தேவாரங்கள் முழுவதும் அடங்கிய நூல்.

அடுக்களை (அட்டில்)- வீடுகளிலே சமையல் செய்யுமிடம்.

அடைக்கலம்- பாதுகாத்து உதவும்படி ஒருவரிடம் ஒப்படைக்கும் பொருள்.

அடையாள அட்டை- குறிப்பிட்ட நபர் இவர்தாம் என்று காட்டும் நிழற் படத்துடன் கூடிய அட்டை.

அடைவு- வட்டிக்குப் பணம் பெறுவோன் ஈடாகக் கொடுக்கும் நகை முதலிய பொருள்கள்.

அட்டாவதானி- ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் திறமை உடையவன்.

அணிசேரா நாடுகள்- வல்லரசுகளின் அணியில் அங்கம் வகிக்காமல், இந்தியா, இலங்கை, யூகோசெலவியா போன்று நடுநிலைமை வகிக்கும் நாடுகள்.

அணிந்துரை- நூலாசிரியர் தவிர்ந்த பிறரால் ஒரு நூலின் பெருமை முதலியன விளங்க அலங்கரித்துச் சொல்லப்படுவது.

அணுசக்தி- அணுவின் மையமான கரு பிளக்கப்படும்போது வெளிப்படும் சக்தி.

அண்ணாவி- கூத்து முதலியனவற்றைப் பழக்குபவர்.

அதிதி- 1. முன்னொருகாலமும் அறியப்படாதவனாய்ப் போசனத்தின் பொருட்டு வந்தவன்.
2. ஒரு வைபவத்துக்கு விசேடமாக அழைக்கப்படுபவர்.

அதிரடிப்படை- கலகங்களை விரைவாக அடக்குவதற்கெனப் பயிற்றப்பட்ட படைப்பிரிவு.
அத்திவாரம்- கட்டடங்களுக்கு ஆதாரமாக அடியில் இடப்படுவது.
அநாதர்- தாய்தந்தையரை இழந்து, ஆதரிப்பார் எவருமற்ற நிலையிலிருப்பவர்.
அநாதர்சாலை- ஆதரிப்பார் எவரும் அற்றவரை வைத்துப் பேணும் இடம்.
அநுதாபம்- ஒருவர் படுந் துன்பத்தைக் கண்டோர் அல்லது கேட்டோர், அவர் படுந் துன்பத்திற்சாகத் தாமும் கவலைப்படுதல்.
அநுபந்தம் (பின்னிணைப்பு)- ஒரு நூலின் பின்னே சேர்க்கப்படுவது.
அநுபானம்- மருந்துடன் சேர்த்து உண்ணப்படும் பொருள்.
அநுவதித்தல்- யாதேனும் ஒரு பயன் கருதி முன்னே கூறியதை மீண்டுங் கூறுதல்.
அந்தப்புரம்- அரமனைகளிலே அரசமகளிர் தங்குவதற்கு அமைக்கப்பட்ட தனியிடம்.
அந்தாதி- ஒரு செய்யுளின் அந்தம் அடுத்த செய்யுளின் முதலாக வரத் தொடுக்கப்படுவது.
அபரக்கிரியை- ஒருவர் இறந்தபின், அவருடைய நன்மைக்காக அவருடைய பிள்ளைகள் முதலானோராற் செய்யப்படுங் கிரியை.
அபரபக்கம்- (தேய்பிறை) பூரணை கழிந்த பிரதமை முதல் அமாவாசையீறுகவுள்ள காலம்.
அபிதானகோசம்- பெயர்ச் சொற்களை அகரவரிசைப்படுத்தி, அவை குறிப்பிடும் வரலாறு, பொருள் முதலியவற்றை விளக்கும் நூல்.
அபிநயம்- மனக்கருத்தைக் குறிப்பாய் விளக்கும் அங்க அசைவு.
அமங்கலி- கணவனை இழந்தமையால், சுப காரியங்களை முன்னின்று நடாத்தும் உரிமை அற்றவள்.
அம்பலம்- பிரயாணிகள் எவ்வித கொடுப்பனவுமின்றித் தங்கிச் செல்வதற்குரிய இடம்.
அரங்கம்- ஆற்றின் முடிவிலோ இடையிலோ காணப்படும் நிலப்பகுதி.
அரங்கேற்றம்- புதிதாய் இயற்றிய நூலை அல்லது புதிய நாட்டிய நிகழ்ச்சியை அறிஞர் பலர் கூடிய சபையிலே படித்தோ ஆடியோ காட்டி அங்கீகாரம் பெறல்.
அருள்- தொடர்பு பற்றாது எல்லா உயிர்கள்மேலுஞ் செல்வதாகிய கருணை.
அலி- ஆணும் பெண்ணுமல்லாதது.



அல்லங்காடி- மாலையில் அல்லது இரவிற் கூடுஞ் சந்தை.
அவசரகாலச்சட்டம்- நாட்டிலே வன்செயலோ மற்றும் அசம்பாவிதங்களோ தோன்றுங் காலத்தில், அத்தியாவசிய சேவை, விநியோகம் முதலியன தடையின்றி நடைபெறுவதற்காகப் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், சாதாரண சட்டங்களுக்குப் புறம்பாக விசேட அதிகாரங்களை அரசுக்கு வழங்குஞ் சட்டம்.
அவதானநிலையம்- வெப்ப தட்ப ஏற்றத்தாழ்வுகளையும், காற்றமுக்கம், புயல், மழை போன்ற நிலைமைகளையும் முன்கூட்டியே அவதானித்து அறிந்து தெரிவிக்கும் நிறுவனம்.
அவமிருத்து (துன்மரணம்)- நோய் முதலிய இயற்கைக் காரணங்களின்றி, வேறுவிதமாக ஏற்படும் மரணம்.
அவிசு- (அவி, அவிப்பாகம், ஆகுதி) தேவர்களுக்கு வேள்வித் தீயிற் சமர்ப்பிக்கப்படும் நெய் முதலிய உணவுகள்.
அவிசு- உப்பின்றிச் சமைத்த பச்சையரிசிச் சாதம்.
அழைப்பாணை- குறித்த ஒருநாளில், நீதிமன்றத்திற் சமுகமாயிக்கும்படி ஒருவருக்கு நீதிபதியால் விடுவிக்கப்படும் அதிகாரபூர்வமான கட்டளை.
அறம்பாடுதல்- பிறருக்குத் தீங்குவிளையும் வண்ணம் அமங்கலச் சொற்களைச் சேர்த்துக் கவி பாடுதல்.
அறிமுகவிழா- புதிய ஒரு நூலை வாசகர்களுக்கு அறிமுகஞ் செய்து வைக்கும் நோக்கத்துடன் எடுக்கப்படும் விழா.
அன்பளிப்பு- அன்பின் அடிப்படையில் ஒருவருக்கு வழங்கப்படும் பணம் அல்லது பொருள்.
அன்பு- தொடர்புடையாரிடத்து உண்டாகும் இரக்கம்.
அக்கிரமிப்பு- ஒரு நாட்டுப் போர்வீரர் மற்றொரு நாட்டில், எல்லை மீறிப் பிரவேசித்தல்.
ஆச்சிரமம்- தபோதனர் வசிக்கும் இடம்.
ஆட்கொணர்வுமனு- ஒரு கட்சிக்காரரர், மற்றொரு கட்சிக்காரரின் பிள்ளையையோ, பராமரிப்பில் உள்ளவரையோ, உறவினரையோ மறைந்து வைத்துத் தீங்கிழைக்கும் நிலை ஏற்பட இருப்பினும், அல்லது ஒருவர் கைதுசெய்யப்பட்டு, அவர்பற்றிய செய்தி எதுவும் தெரியாதிருப்பினும் குறித்த நபரை மேல் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரும்படி உத்தரவிடுமாறு தாக்கல் செய்யும் விண்ணப்பம்.
ஆட்டுக்கல்- ஊறிய அரிசி முதலியவற்றை ஆட்டி அரைக்குங் கல்.
ஆணைக்குழு- திணைக்களங்கள் முதலியவற்றில் ஒழுங்கீனங்கள் காணப்பட்ட இடத்தோ, நாட்டில் அசம்பாவிதங்கள் ஏற்பட்ட இடத்தோ அவற்றை விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நியமிக்கப்பட்ட குழுவினர்.
ஆதனம்- ஒருவருக்குரிய நிலம் முதலிய சொத்துக்கள்.

**ஆதீண்டுகுற்றி-** பசுக்கள், தம் தினவைப் போக்கிக்கொள்ள உரோஞ்சுதற் பொருட்டு நாட்டப்பட்டிருக்கும் தூண்.

**ஆதீனம்-** சமயப்பணி செய்யும் மடம்.

**ஆதுலர்சாலை-** வறியவர், அங்கவீனர், முதியோர் என்பார்க்கு உண்டியும் உறையுளும் அளித்து ஆதரிக்கும் இடம்.

**ஆத்திகன்-** கடவுள் உண்டென்ற கொள்கையை உடையவன்.

**ஆய்வுரை ( விமரிசனம் )-** ஒன்றின் குறைநிறைகளை எடுத்துரைத்தல்.

**ஆவணம் (உறுதி )-** நிலத்திலோ பொருள்களிலோ உரிமை கொண்டாடுவதற்கு வகைசெய்யும் விதத்தில் எழுத்துருவில் அமைந்த சாதனம்.

**இடக்கரடக்கல்-** சபையிற் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறுவகையிற் சொல்லுதல்.

**இடம்பம்-** தன்னைப் பிறர் மதிக்கவும் புகழவும் வேண்டுமென்று அதற்கேற்ற கருமங்களைச் செய்தல்.

**இரட்டுறமொழிதல்-** இரண்டு பொருள்படும்படி சொல்லுதல்.

**இடுகாடு-** பிரேதங்களை அடக்கஞ் செய்யுமிடம்.

**இடைக்கால உத்தரவு-** நடைமுறையிலிருந்து வரும் கருமமொன்றை ஒரு கட்சிக்காரர் தடைசெய்தபோது, மற்றக் கட்சிக்காரர் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் வழக்கு முடியும் வரை அல்லது குறித்த ஒருகால எல்லைவரை தடையை நீக்கி வழமைபோல நடைபெறச் செய்வதற்கு நீதிமன்றம் இடும் கட்டளை.

**இடைக்காலத் தடையுத்தரவு-** தொடரப்பட்ட ஒரு வழக்கு முடியும்வரை எதிர்க்கட்சியினர் விண்ணப்பதாரரின் உரிமையை மீறி எந்த அலுவலையும் செய்யாதிருக்கும்படி நீதிமன்றம் இடும் கட்டளை.

**இடைச்செருகல்-** ஒரு நூலில் அதன் ஆசிரியர் அல்லாத பிறரால் எழுதிப் புகுத்தப்பட்ட பகுதி.

**இடைநிறுத்தம்-** ஓர் உத்தியோகத்தர், சட்டஒழுங்குக்கு அமைவாகக் கடமையாற்றவில்லையென்ற நிலை ஏற்பட்டவிடத்து, அவர் தொடர்பான விசாரணையை நடாத்துவதற்கு முன்னேடியாக அவரை உத்தியோகக் கடமையினின்றும் தடுத்து வைத்தல்.

**இணக்கசபை-** உள்ளூரில் மக்களிடையே ஏற்படும் பிணக்குகளைச் சமாதானமாகத் தீர்த்துவைக்கும் அதிகாரம் பெற்ற சபையினர்.

**இயக்குநர்குழு-** ஒரு நிறுவனத்தை நடாத்துவதற்குப் பொதுமக்களாலோ அரசினராலோ நியமிக்கப்பட்ட உறுப்பினரைக் கொண்ட அமைப்பு.

**இரகசியப்பொலிசுப்படை-** பொதுமக்கள் மத்தியில் நடமாடி, கொலை, களவு முதலான குற்றங்கள் புரிந்தோரை இரகசியமான முறையில் அறிந்துகொள்ளும் காவற்படையினர்.



**இரங்கற்பா-** ஒருவர் இறந்தவிடத்து அவருடைய அருமை பெருமைகளை நினைவுகூர்ந்து பாடப்படும் பாட்டு.

**இராக்கதம்-** பெண்ணும் சுற்றமும் உடன்படாமல் வலிந்து கொள்ளும் மணம்.

**இருட்டடிப்பு-** சில செய்திகளை ஏதோ ஒரு காரணம்பற்றிப் பத்திரிகையிற் பிரசுரஞ்செய்யாது விடுதல்.

**இலக்கணப்போலி-** இலக்கணம் இல்லாததாயினும் இலக்கணம் உடையது போலச் சான்றேரால் தொன்றுதொட்டு வழங்கப்படுவது.

**இலக்கணை-** ஒரு சொற்றெடர் நேர்பொருளை உணர்த்தாது சம்பந்தம் முதலிய காரணங்களால் பிறிதொரு பொருளை உணர்த்துவது.

**இனக்கலவரச் சட்டம்-** ஒரு நாட்டிலுள்ள வெவ்வேறு இனமக்களுக்கிடையே கலவரம் ஏற்படும்போது அதைக் கட்டுப்படுத்த அல்லது அடக்க உபயோகிக்குஞ் சட்டம்.

**ஈடு-** வட்டிக்குப் பணம் பெறுவோன், அப்பணத்திற்குப் பொறுப்பாகக் கொடுக்கும் நிலம் முதலியன.

**ஈமக்கிரியை-** மயானத்தில் வைத்துப் பிரேதத்துக்குச் செய்யும் சடங்குகள்.

**ஈமம்-** 1- பிரேதத்தைச் சுடுவதற்கு அடுக்கிய விறகு.
2- பிரேதங்களைத் தகனஞ் செய்யுமிடம்.

**ஈட்டுவியாபாரம்-** விற்ற பொருளின் விலையையும் விற்காத பொருளையுந் தருவதாகப் பொருந்தி, தன்னிற் பெரிய வர்த்தகரிடத்தே பொருள்களை வாங்கிச் செய்யும் வர்த்தகம்.

**உச்சிமகாநாடு-** பல நாடுகளைச் சேர்ந்த அதிஉயர்ந்த தலைவர்கள் ஓரிடத்தில் ஒருங்குகூடி, உலக சமாதானம், பொருளாதார விருத்தி முதலான விடயங்கள்பற்றி ஆராயும் பேரமைப்பு.

**உடன்கட்டையேறல்-** கணவனைத் தகனஞ் செய்யும் அக்கினியில் துக்கத்தை ஆற்றாத மனைவி விழுந்து எரிதல்.

**உடன்போக்கு-** காதலன், மணஞ் செய்யுமுன், தாயர் அறியாமல் தலைவியை அழைத்துச் செல்லல்.

**உந்துகணை-** விண்வெளிக் கலங்களை அனுப்புவதற்கு உபயோகப்படுவது.

**உப்பங்கழி-** தரையை ஊடறுத்துக் கடல்நீர் தேங்கிநிற்கும் இடம்.

**உப்பரிகை-** செல்வர் வீடுகளில் மகளிர் முதலியோர் ஓய்வுநேரங்களிற் கூடியிருந்து பொழுது போக்குவதற்காக அமைக்கப்பட்ட மேன்மாடம்.

**உப்பளம்-** உப்பு விளைவிக்கப்படும் இடம்.

**உயர்வு நவிற்சி-** ஒரு பொருளைப்பற்றிக் கேட்போர் மகிழுமாறு உயர்த்திக் கூறுவது.

**உயில் (மரணசாதனம்)-** ஒருவர், தாம் இறந்த பின்னர், தமது சொத்துக்கள் எவ்வாறு பிரிக்கப்படல் வேண்டுமென்பதனை எழுதி வைத்துள்ள சட்டபூர்வமான சாதனம்.

**உருவகம்-** உவமானம் உவமேயம் என்னும் இரண்டிற்கும் பேதமின்மை தோன்றச் சொல்லும் ஓர் அணி.

**உவமானம்-** ஒரு பொருளுக்கு ஒப்பாக எடுத்துச் சொல்லப்படும் மற்றொரு பொருள்.

**உவமை-** இருவேறு பொருள்களுக்கு ஏதேனும் ஒருவகையில் ஒப்புமை கூறும் ஓர் அணி.

**உவமேயம்-** உவமானத்தால் விளக்கப்படும் பொருள்.

**உரைகல்-** பொன்னை உரைத்து அதன் தரத்தை அறிந்துகொள்வதற்கு உபயோகிக்கப்படும் ஒருவகைக் கல்.

**உலோகாயதன்-** உலகமும் உலக இன்பங்களும் மாத்திரமே மெய்யென்றும், கடவுளோ மறுமையோ இல்லையென்றும் நம்புபவன்.

**உலோபி-** தானும் அநுபவியாது பிறருக்குங் கொடாது பணத்தைச் சேமித்து வைப்பவன்.

**உள்ளிருப்பு வேலைநிறுத்தம்-** எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக அலுவலர்கள் தத்தம் கடமைகளையுஞ் செய்யாது வெளியேயுஞ் செல்லாது அலுவலகத்திற் சும்மா இருத்தல்.

**உறங்கலிருக்கை-** பயணி ஒருவர், புகைவண்டியில் வசதியாக இருந்து பிரயாணஞ் செய்வதற்காக விசேடமாய் அமைக்கப்பட்ட ஆசனம்.

**ஊதாரி-** கண்மூடித்தனமாகப் பணத்தை வீணே செலவு செய்பவன்.

**ஊரடங்குச்சட்டம்-** நாட்டில் பதற்றநிலை ஏற்படுங் காலத்தில், குறிப்பிட்ட நேர எல்லையுள், மக்கள், தமது வசிப்பிடங்களைவிட்டு வெளியே செல்லக்கூடாதென அரசாங்கத்தால் இடப்படுஞ் சட்டம்.

**ஊருணி-** ஊர்மக்கள் பருகுவதற்கான நீரைப் பெறுங் கிணறு முதலியன.

**ஊர்காவற்படை-** நாட்டில் வன்செயல்கள் தலைதூக்காவண்ணம் பாதுகாப்பதற்கென ஊர்தோறும் நிறுவப்பட்ட அவ்வப்பகுதி மக்கள் சிலரை உள்ளடக்கிய படை.

**எதுகை-** அடிதோறுஞ் செய்யுட் சீர்களின் அல்லது வாக்கியச் சொற்களின் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

**எய்ப்பில்வைப்பு-** முதுமைக்காலத் தேவைகளுக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்.

**ஏகபோகம்-** ஒருவர் முழுப் பொருளையுந் தாமே தனித்து அநுபவித்தல்.

**ஏணை-** குழந்தையைக் கிடத்தித் தாலாட்டும் புடைவைத் தொட்டில்.

**ஏற்றப்பாட்டு-** நீர் இறைக்கும்போது பாடப்படும் பாட்டு.



**ஐக்கிய நாடுகள் சபை-** உலகப் பிரச்சினைகளை யுத்தமின்றிச் சமாதானமாகத் தீர்ப்பதற்கு முயலும் சுதந்திர நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மன்றம்.

**ஐந்தொகை-** ஒரு நிறுவனம், குறிப்பிட்ட ஒரு தேதியிற் கொண்டுள்ள மூலதனம், இருப்பு, சொத்து, வருமதி, கொடுப்பனவு என்பனவற்றை எடுத்துக்காட்டும் நிதிக்கூற்று.

**ஐம்புலன்-** சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து உணர்வு.

**ஐம்பூதம்-** நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பொருள்.

**ஐம்பொறி-** மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.

**ஒட்டம்:** சூதாடுதல் முதலியவற்றில் வென்றோர் பெற்றுக்கொள்ளும்படி வைக்கும் பொருள்.

**ஒட்டுண்ணி-** மற்றோர் உயிர்ப் பொருளிலிருந்து தன் உணவை உறிஞ்சி வாழும் பிராணி அல்லது தாவரம்.

**ஒத்திகை-** கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுதற்குமுன் சரிபிழை பார்த்துத் திருத்தும் நிகழ்ச்சி.

**ஒத்திவைத்தல்-** ஒரு கருமத்தைப் பின்னொருசெய்யலாமெனத் தள்ளி வைத்தல்.

**ஒத்திவைப்புத் தண்டனை-** ஒரு வழக்கில், குற்றவாளிக்கு விதிக்கப்பட்டு அவரால் அநுபவிக்கப்படாது, பின்னரும் அவர் ஏதும் குற்றஞ் செய்தால் அநுபவிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பின்போடப்பட்ட தண்டனை.

**ஒப்பாரி-** இறந்தவரை நினைந்து மரணவீட்டிற் பெண்கள் புலம்பி அழும் நாட்டுப்பாடல்.

**ஒப்புதல் வாக்குமூலம்-** குற்றம்புரிந்தவரென ஐயங்கொண்டு விசாரணை நடாத்தும்போது ஒருவர், தாம் அந்தக்குற்றத்தைச் செய்ததென அல்லது சம்பந்தப்பட்ட ஒரு செய்கையைச் செய்ததென ஒப்புக்கொண்டு அளிக்கும் வாக்குமூலம்.

**ஒப்புரவு-** உலக நடையினை அறிந்து ஒழுகுதல்.

**ஒழுங்கு நடவடிக்கை-** ஒருவர், தாம் மேற்கொண்ட கடமைக்குத் தக்கவாறு ஒழுகாது, தான்தோன்றித்தனமாக நடந்து ஒழுங்கை மீறியபோது, அவருக்கெதிராக ஒழுகலாற்றைப் பேணும் முறையில் எடுக்கப்படும் நடவடிக்கை.

**ஒற்றர்-** எதிரிகள் சந்தேகப்படாவண்ணம் அவர்கள் மத்தியிலே சஞ்சாரம்பண்ணி இரகசியத் திட்டங்களை அறிந்துவந்து அரசுக்கு அறிவிப்பவர்.

**ஒற்றி-** சொத்தை அநுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்.

ஒற்றையாட்சி- நாடு முழுவதற்குமான சட்டம் இயற்றும் உரிமையைக் கொண்ட, இறைமையுள்ள, சகல அமைப்புக்களையும் கட்டுப்படுத்தும் வல்லமையுடைய ஓர் ஆட்சிமுறை.

ஓடை- ஆறு முதலியவற்றிலிருந்து நீர் பாய்ந்து நிறைந்து நிற்கும் நீண்ட நீர்நிலை.

ஓம்படை- பேணிக் காத்துத்தருமாறு ஒருவரை அல்லது ஒரு பொருளை மற்றொருவரிடம் ஒப்படைத்தல்.

ஓய்வூதியம்- இளைப்பாறிய உத்தியோகத்தர் ஒருவருக்கு மாதந்தோறும் வழங்கப்படும் பணம்.

ஓலக்கம்- அரசன், சபாமண்டபத்திலே அமைச்சர், படைத்தலைவர், அறிஞர் முதலிய பரிவாரத்தினர் சூழ வீற்றிருத்தல்.

ஓவியன்- சித்திரங்களை வரைபவன்.

கடமை- மனச்சாட்சியின்படியேனும் சட்டப்படியேனும் ஒருவரால் செய்யப்பட வேண்டியது.

கடவுச்சீட்டு- ஒரு நாட்டு அரசு தனது பிரசையொருவருக்கு இன்னொரு நாட்டிலே பாதுகாப்புடன் பிரயாணஞ் செய்வதற்காக வழங்கும் அநுமதிச்சீட்டு.

கட்டாணை- ஒரு செயலைச் செய்யுமாறு அல்லது செய்யாதிருக்குமாறு நீதிமன்றத்தால் விடுக்கப்படும் கட்டளை.

கட்டியம்- கடவுளர், அரசன் என்போர் எழுந்தருளும்போது அவர்களது விருதுப்பெயர், வெற்றி முதலியவற்றை எடுத்துக் கூறுதல்.

கட்டுக்கதை- ஆதாரமற்ற செய்திகளைக் கொண்டு புனையப்பட்ட கற்பனைக்கதை.

கட்டுத்தறி- மிருகங்களைக் கட்டி வைப்பதற்கு உபயோகிப்படும் தூண்.

கணவாய்- நெருங்கிய மலைகளுக்கிடையே அமைந்திருக்கும் தாழ்ந்த நிலப்பகுதி.

கணனி- கூட்டல் முதலிய கணக்குகளைக் கணித்துக் காட்டும் யந்திரம்.

கண்காணி- தொழிலாளரை மேற்பார்வை செய்பவன்.

கண்சாடை- அறிந்தும் அறியார் போன்று இருத்தல்.

கண்டம்- நீர் சூழ்ந்த பெரிய நிலப்பரப்பு.

கதவடைப்பு- தொழிலாளர்களின் எதிர்ப்பை முறியடிப்பதற்காக முதலாளிகள் மேற்கொள்ளும் நடவடிக்கை.

கதாகாலட்சேபம்- சங்கீதத்துடன் கூடிய கதாப்பிரசங்கம்.

கந்தூரி- முஸ்லிம் பெரியார்களின் நினைவு விழாவின்போது அளிக்கப்படும் விருந்து.

கந்தை- பலவிடங்களிற் கிழிந்தும் சிதைந்தும் உளதாய்த் தைக்கப்பட்ட ஆடை.



கபடி- உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுபவன்.

கப்பம்- சிற்றரசன் பேரரசனுக்குக் கொடுக்கும் திறைப்பொருள்.

கம்மாலை- சிறிய அளவில் உலோக வேலைகள் செய்யப்படும் இடம்.

கருத்தரங்கு- ஒரு பொருள் குறித்துப் பலரும் கருத்துத் தெரிவிக்கும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம்.

கருவறை- சைவக் கோயில்களில் மூலமூர்த்தி எழுந்தருளியிருக்குமிடம்.

கலங்கரைவிளக்கம்- இரவில், மாலுமிகளுக்கு வழிகாட்டுவதற்காகக் கடலிலுள்ள கற்பாறையில் அல்லது கடற்கரையில் மிகவுயரத்தில் அமைக்கப்பட்ட விளக்குத் தம்பம்.

கலைசாரத் தூதுக்குழு- ஒருநாட்டவரின் வேண்டுகோளை ஏற்று அந்நாட்டிற்கு விஜயஞ் செய்யும் குழு.

கலைக்களஞ்சியம்- அறிவுத்துறைகள் அனைத்தையும் பற்றிய விடயங்களைத் திரட்டித்தரும் நூல்.

கழிவிரக்கம்- நடந்து முடிந்த நிகழ்ச்சி குறித்து விசாரப்பட்டுக் கொண்டிருத்தல்.

கவசம்- போர்வீரர், தமது உடலைப்பாதுகாக்க அணியும் இரும்பு முதலியவற்றாலான உறை.

களஞ்சியம்- பொருள் பண்டங்களைச் சேகரித்து வைக்குமிடம்.

கற்பகம்- விரும்பியதைக் கொடுக்கும் அற்புதத்தன்மை வாய்ந்த விண்ணுலக விருட்சம்.

கன்னிகை- இளமை அழகு முதலியன நிறைந்து விவாகப்பருவத்தை அடைந்த பெண்.

கன்னிக்கவிதை- ஒருவர், முதன்முதல் இயற்றிய பாட்டு.

கன்னிப்போர்- அரசகுமாரன் ஒருவன் முதன்முதல் இயற்றும் போர்.

கன்னிவேட்டை- அரசகுமாரன் காட்டிற்குச் சென்று முதன்முதல் நடாத்தும் வேட்டை.

காசுக்கட்டளை- தபால்நிலைய அதிபர் ஒருவர், பணம் அனுப்புநர் குறிப்பிட்ட நபருக்குப் பணத்தைக் கொடுக்குமாறு மற்றொரு தபால் நிலைய அதிபருக்கு விடுக்கும் ஆணை.

காசேடு- காசு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குரிய குறிப்புப் புத்தகம்.

காசோலை- பணங் கொடுக்குமாறு வங்கிக்கு எழுத்து மூலம் கட்டளையிடும் ஒருவகைப் படிவம்.

காப்புறுதி செய்தல்- எதிர்பாராத வகையில் ஏற்படக்கூடிய இழப்பு, அபாயம் முதலியவற்றிலிருந்து ஈடு செய்வதற்காகச் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம்.

**காணிக்கை-** கடவுளர்க்கேனும் பெரியோர்க்கேனும் சமர்ப்பிக்கப்படும் பொருள்.

**காலமரணம்-** முதிர்ந்த வயதில் ஏற்படும் மரணம்.

**காலாள்-** கால் நடையாகச் செல்லும் போர்வீரர்.

**கால்கோள்விழா-** யாதாயினும் ஒன்றைத் தொடங்குவதற்கு எடுக்கப்படும் விழா.

**காவற்காடு-** கோட்டையைச் சேர்ந்துள்ள அகழிக்கு வெளியே அரணாய் அமைந்துள்ள காடு.

**கிட்டங்கி-** வியாபார நிறுவனங்கள் பொருள்களைச் சேமித்து வைத்திருக்கும் இடம்.

**குடாக்கடல்-** மூன்று பக்கமும் தரையாற் சூழப்பட்ட கடற்பகுதி.

**குடிபுகுதல்-** புதிய இல்லத்தை அமைத்த ஒருவர், சமயச்சடங்குகளை நிறைவேற்றி அங்கு வசிப்பதற்கு முதன்முதல் நல்ல முகூர்த்தத்திற் செல்லுதல்.

**குதர்க்கம்-** காரண காரியத் தொடர்பற்ற வீண் பேச்சு.

**குத்தகை-** பயிர்ச்செய்கைக்குப் பெற்ற நிலத்துக்காக ஆண்டுதோறும் நிலச் சொந்தக்காரனுக்குக் கொடுப்பது.

**குரவர்-** அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்போர்.

**குருகுலவாசம்-** மாணாக்கர் ஆசிரியருடன் தங்கியிருந்து கல்வி பயிலுதல்.

**குழூஉக்குறி-**ஒரு கூட்டத்தார், பிறரறியாதபடி தம்முள் வழங்கி வரும் குறிப்பு மொழி.

**குறிஞ்சி-** மலைசார்ந்த இடம்.

**குற்றவாளி-** ஒரு வழக்கிற் குற்றஞ் சாட்டப்பட்டு, நீதிமன்றத்தால் குற்றம் புரிந்தவரென நிரூபிக்கப்பட்டவர்.

**கூட்டாட்சி-** மத்திய அரசும் மாநில அரசும் தத்தம் ஆதிக்கத்துக்கு உட்பட்டவைகளில் கூட்டாகவும் சுதந்திரமாகவும் இயங்கும் வகையில் அதிகாரங்களைப் பிரித்துக்கொள்ளும் ஓர் அரசியல் முறை.

**கூட்டுத்தாபனம்-** அரசினரால் நியமிக்கப்பட்ட இயக்குநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, இலாபம் ஈட்டுதல் முதலான நோக்கங்களை அடிப்படையாக வைத்துப் பொருள்களை ஆக்குதல் போன்ற கருமங்களை இயற்றும் நிறுவனம்.

**கூலிப்படை-** ஒரு பகுதியினருக்காகக் கூலி பெற்றுக்கொண்டு போரிடும் படை.

**கூழைப்படை-** போர்க்களத்தில், பலவகைப்பட்ட படைவகுப்புகளின் இறுதியில் நிற்கும் படை.



**கெரிலாக்கள்-** ஒரு நாட்டின் அதிகாரத்துக்குட்பட்ட படைபோலல்லாமல், இரகசியமாய்ப் போர்ப்பயிற்சி பெற்று ஒரு விவகாரத்தை அடிப்படையாக வைத்துத் திடீரெனத் தாக்கும் போர்வீரர்.

**கேள்வு-** கப்பலில், பொருளை ஏற்றிச் செல்வதற்கான கூலி.

**கைந்நூல்-** ஒருகுறித்த விடயம் பற்றிய அறிவுறுத்தல்களையும் செயல் முறைகளையும் சம்பந்தப்பட்டோருக்குத் தெரிவிக்கும் நூல்.

**கைம்மருந்து-** ஒருவர், வைத்தியனின்றித் தாமே தமது நோய்க்குச் செய்யும் மருந்து.

**கையுறை-** குரு, பெரியோர், குழந்தைகள் ஆகியோரைக் காணச் செல்லுவோர் கொண்டு செல்லும் உபகாரப் பொருள்.

**கையூட்டு- (கைலஞ்சம்)** ஒரு கருமத்தை எளிதில் நிறைவேற்றற் பொருட்டு அதனோடு தொடர்புடையவருக்கு வழங்கப்படும் இலஞ்சப் பணம்.

**கோமாளி-** நாடகத்தில் நகைச்சுவை உண்டுபண்ணத் தோன்றுபவன்.

**ஹர்த்தால்-** கடையடைப்பு, வேலைநிறுத்தம், அத்தியாவசியத் தேவைகளைத் தம்பிக்கச் செய்தல் முதலியன மூலம் எதிர்ப்பைத் தெரிவித்துக் குறைபாடுகளை நிவிர்த்தி செய்யும்படி வேண்டுதல்.

**சகபாடி-** ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன்.

**சகலன்-** மனைவியின் சகோதரிக்குக் கணவன்.

**சகோதரர்-** ஒரு தாய் வயிற்றிற் பிறந்தோர்.

**சங்கமம்-** ஆறு கடலோடு கலக்குமிடம்.

**சங்கம்-** குறித்த சில நோக்கங்களுக்காக விதிகளை வகுத்துக் கட்டுப்பாட்டுடன் இயங்கும் அமைப்பு.

**சஞ்சிகை-** குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை புத்தக உருவில் வெளிவரும் பத்திரிகை.

**சட்டத்தரணி-** சட்டநூற் கல்வித் தராதரம் பெற்றுக் கட்சிக்காரர்களுக்காக வழக்குகளைத் தாக்கல் செய்து நடத்துவதற்கு உயர்நீதிமன்றத்தினால் உத்தரவு வழங்கப்பட்டவர்.

**சட்டமா அதிபர்-** சட்டத்துறையில் ஆற்றலும் அனுபவமும் பெற்று வழக்கு, சட்டம் முதலியன சம்பந்தமாக அரசுக்கு ஆலோசனை கூறும் உயர்தர அதிகாரி.

**சட்டமூலம்-** பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அங்கே கொண்டுவரப்படும் சட்டத்தின் பூர்வாங்க நிலை.

**சதாப்தம்-** நூறு ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி.

**சதாவதானி-** ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன்.

**சதுக்கம்-** நான்கு தெருக்கள் ஒன்றுகூடுமிடம்

சத்தியப்பிரமாணம்- ஒருவர், தாம் எடுத்துக்கொண்ட கடமை யை விசுவாசமாகவும் திருப்தியாகவும் செய்வதாக நீதிபதி முதலியோர் முன் சத்தியஞ் செய்துகொள்வது.

சத்திரசிகிச்சை- ஆயுதங்கள் கொண்டு நோய் கண்ட இடங்களை அறுத்துச் செய்யும் வைத்தியம். (சத்திரம் - ஆயுதம்)

சந்தர்ப்பவாதி- நிலைமைக்குத் தக்கவாறு கொள்கையை அடிக்கடி மாற்றித் தேவைகளை நிறைவேற்றிக்கொள்பவன்.

சந்தி- பல தெருக்கள் கூடுமிடம்.

சந்தை- பொருள்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் மக்கள் கூடிக் கலையும் இடம்.

சந்தைப்படுத்தல்- உற்பத்திப் பொருள்களை மக்களின் கவனத் தை ஈர்க்கும் வகையில் விளம்பரஞ் செய்தல்.

சம்பிரதாயம்- ஓர் இனத்தில், பரம்பரையாக இருந்துவரும் பழக் வழக்கங்கள்.

சமூகம்- பொதுநோக்கோடு, இணைந்து வாழும் மக்கட் கூட்டம்.

சயந்திவிழா- வருடந்தோறும் ஒருவர் பிறந்த நாளன்று எடுக்கப் படும் விழா.

சரணடைதல்- வேறு துணை இல்லையென ஒருவரிடம் தன்னை ஒப் டைத்தல்.

சரமகவி- இறந்தவரை நினைந்து அபரக்கிரியை செய்யும் கடை நாளன்று அவரது சிறப்பு முதலியவற்றைக் குறித்துப் பாடும் பாட்டு

சரவை- சரி பிழை பார்த்தற்கான அச்சுப்பிரதி.

சர்வாதிகாரம்- நாட்டின் எல்லா அதிகாரங்களையும் தனதாக்கி கொள்ளும் ஒருவனது ஆட்சி.

சனநாயகஆட்சி- மக்களால் மக்களுக்காக அமைத்துக் கொள்ள பட்ட மக்கள் ஆட்சி.

சன்மானம்- ஒரு கருமத்தை இயற்றியமைக்கு வேதனத்துக்குப் பு லாக வழங்கப்படுவது.

சாசனவியல்- கல்லிலோ செப்பேடுகளிலோ எழுதப்பட்ட பழ கால எழுத்துக்களை வாசிக்கவும், அவற்றின் பொருள்களை விளங்கவு ஏற்பட்ட கலை.

சால்பு- அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னு குணங்கள் சேர்ந்த பண்புடைமை.

சாவணம்- நுண்ணிய பொருள்களை இடுக்கி எடுக்கும் ஒருவ க கருவி.

சான்றோன்- அன்பு, நாண், ஒப்புரவு முதலிய நற்குணங் அமையப் பெற்றவன்.

சிகரம்- மலையின் மிக உயர்ந்த பகுதி.



சிக்கனம்- வீண் செலவுகளைத் தவிர்த்துப் பொருள்களை அளவாகச் செலவு செய்வது.

சிதை (சமம்)- பிரேதத்தைச் சுடுவதற்கு அடுக்கிய விறகு.

சிந்தாமணி- எண்ணியதை எண்ணியபடி தரவல்ல தெய்விகமணி.

சிரஞ்சீவி- நெடுங்காலம் வாழ்பவன்.

சிரமதானம்- ஊதியங் கருதாது உழைப்பினைத் தானஞ் செய்தல்.

சிலேடை- ஒரு சொல்லையோ சொற்றொடரையோ இரு பொருள் அமையத் தொடுப்பது.

சிறுபட்டி- கட்டுக் கடங்காத இளைஞன்.

சிறுபான்மையினர்- ஒரு பிரதேசத்திலோ நாட்டிலோ வசிக்கும் மக்களில் இனரீதியாகவோ மதரீதியாகவோ குறைந்ததொகையினராக உள்ளவர்கள்.

சிற்பம்- கல்லிலோ சுதை முதலான பொருள் கொண்டோ கண் ஒன்றைக் கண்ட உருவத்தை அல்லது கற்பனை உருவத்தை அமைக்குங் கலை.

சிற்பி- கல்லிலோ சுதை முதலான பொருள் கொண்டோ கண்ணுற் கண்ட உருவத்தை அல்லது கற்பனை உருவத்தை அமைப்பவன்.

சீதனம்- ஒரு பெண்ணுக்கு விவாகங் காரணமாக அவளது பெற்றோ ரால் அல்லது நெருங்கிய உறவினரால் உறுதி சாதனஞ் செய்து கொடுக்கப்படும் பணம், நகை, நிலபுலம் முதலிய பொருள்கள்.

சுக்கான்- தோணி முதலியவற்றை வேண்டிய திசைக்குத் திருப்ப உதவுங் கருவி.

சுங்கம்- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு அரசால் விதிக்கப்படும் வரி.

சுடுகாடு (சுடலை)- பிரேதங்களைத் தகனஞ் செய்யுமிடம்.

சுமங்கலி- பூவும் பொட்டும் அணிந்து கணவனும் தானுமாகச் சுப காரியங்களை முன்னின்று நடத்தும் உரிமை உடையவள்.

சுமைதாங்கி- பாரமான பொருள்களைச் சுமந்துசெல்லும் வழிப் போக்கர், வேண்டியபோது அவற்றை இறக்கி வைத்தற்கெனத் தெரு வோரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சுவர்போன்ற கட்டுமானம்.

சுயசரிதம்- ஒருவர், தமது வரலாற்றைத் தாமே எழுதியமைத்த நூல்.

சுயநிர்ணயஉரிமை- ஒரு நாட்டில் வாழும் மக்களுள் ஓரினத்தி னர் தங்களுக்கு எத்தகைய ஆட்சிமுறை வேண்டுமென்று நிர்ணயிக்கும் உரிமை.

சுயம்பாகி- தானே சமைத்து உண்பவன்.

சுயம்பு- ஒருவராலும் படைக்கப்படாது தானே தோன்றியது.

சுயம்வரம்- கன்னிகை, ஆடவர் பலர் கூடிய சபையில் தனக்கியைந்த கணவனைத் தெரிந்து மாலையிடுவது.

சுயாட்சி- ஒன்றுபட்ட மக்கட் சமுதாயத்தினர் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும் ஓர் அரசியல் முறை.

சுருங்கை- நிலத்தின்கீழ் அமைக்கப்படும் இரகசிய வழி.

சுவீகாரபுத்திரன் (தத்தபுத்திரன்)- தமக்குக் குழந்தைச் செல்வம் இன்மையால் பிறரிடமிருந்து சுவீகரித்து உறுதி சாதனம் செய்து வாரிசுக்குரியராய் வளர்த்துவரும் புத்திரன்.

சுற்றுநிருபம்- ஒரு திணைக்கள அதிகாரி, தன் கீழ்க் கடமை புரிபவர்களுக்குக் காலத்துக்குக் காலம் நிருவாக அலுவல்கள் குறித்து அனுப்பும் பணிப்புரை.

சுற்றுலா- ஊர் காண்பதற்காகவும் உல்லாசத்திற்காகவும் பல இடங்களுக்குஞ் சென்று மீளும் பிரயாணம்.

சுனை- மலையின்கண் உள்ள நீர் நிலை

சூத்திரப்பாவை- கயிற்றினால் ஆட்டப்படும் பாவை.

சூளுரைத்தல்- 'யான் இதனை இயற்றுவிடின் இன்ன இன்னவற்றை எய்துவேன்' என்று ஆணையிட்டுரைத்தல்.

செங்கம்பளவரவேற்பு- வேற்று நாட்டுத் தலைவருக்கோ. அறிஞர்களுக்கோ, அகில உலக சாதனை ஒன்றை நிலைநாட்டிய வீரர்களுக்கோ அரசு அளிக்கும் அதி உயர்ந்த வரவேற்பு.

செங்கோன்மை- அரசனது நீதிவழுவாத ஆளுகை.

செஞ்சோறு- அரசன், தன்பொருட்டு வாழ்வாருக்குக் காலமெல்லாம் அளிக்கும் உணவு.

செய்குன்று- அரமனையை அடுத்த இடங்களிலே அமைக்கப்படும் சிறுகுன்று.

செய்தித்தணிக்கை- மக்களின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் செய்திகள் பத்திரிகையிற் பிரசுரமாகாதபடி தகுதிபெற்ற அதிகாரி மேற்கொள்ளும் நடவடிக்கை.

செய்ம்மதி- பூமியை வட்டமிடுமாறு விண்வெளிக்கு அனுப்பப்படும் செயற்கைக் கோள்.

செலாவணி- ஒரு நாட்டின் நாணயத்தை இன்னொரு நாட்டின் நாணயத்தோடு ஒப்பிட்டு அவற்றைச் சமப்படுத்தும் பெறுமதிகளை நிர்ணயிப்பதற்காகவும், நாடுகளுக்கிடையே பணம் பரிமாறப்படாமல் கொடுக்கல் வாங்கல்களை நெறிப்படுத்துவதற்காகவும் கையாளப்படும் பொருளாதார முறை.

செவிலி- வளர்ப்புத்தாய்.

சென்மதி- பிறருக்கு இறுக்கப்படவேண்டிய தொகை.

சேமக்காலை- கிறிஸ்தவர்கள் பிரேதத்தை அடக்கஞ் செய்யுமிடம்.

சேமலாபநிதி- ஊழியரின் பிற்கால நன்மைக்காக நிறுவனங்கள் ஒதுக்கிவைக்கும் பணம்.



சொத்து- பணம்பண்டம்நிலபுலம்முதலிய உடைமைப் பொருள்கள்.

சோடசாவதானி- ஒரேசமயத்தில் பதினாறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்.

சோதிடம்- கிரகங்களினதும் நட்சத்திரங்களினதும் நிலையைக் கொண்டு பலாபலன்களைக் கூறும் கலை.

சோனை (சோனாமாரி, சோனாவாரி)- விடாமற் பெய்யும் மழை.

ஞானஸ்நானம்- கிறிஸ்து சமயப் பிரவேசஞ் செய்யும் ஒருவருக்குக் குருவினால் தூயநீர் தெளித்துச் செய்யப்படுங் கிரியை.

ஞானி- உலகப்பற்றை விட்டுக் கடவுளை அடையவேண்டுமென்ற தனி நோக்கோடு இருப்பவர்.

தசாப்தம்- பத்து ஆண்டுகள்கொண்ட காலப் பிரிவு.

தசாவதானி- ஒரேசமயத்திற் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன்.

தடுக்கு- குழந்தையைக் கிடத்துவதற்குப் பயன்படும் பாய்.

தடுப்புக்காவற்சட்டம்- குற்றம் புரிந்தவரென ஐயமுற்ற ஒருவரை விசாரணை செய்வதற்காகத் தடுப்புக்காவலில் வைக்க அதிகாரம் வழங்குஞ் சட்டம்.

தட்சணை- ஒரு கிரியை முடிவில் அதனை நடாத்திவைத்த குருவுக்குக் கொடுக்குஞ் சன்மானம்.

தட்டுப்பாடு- வர்த்தகர், அதிக இலாபம் வைத்து விற்பதற்காகச் சில பொருள்களை வேண்டுமென்றே பதுக்குவதால் உருவாகும் நிலை.

தபுதாரன் (பிதுரன்)- மனைவியை இழந்தவன்.

தபோவனம்- துறவறம் பூண்ட தூயோர் ஒதுங்கி வாழும் இடம்.

தயக்கம்- ஒரு கருமத்தைச் செய்வதோ விடுவதோ என மனம் தடுமாறும் நிலை.

தரகர்- ஒரு கருமத்தை நிறைவேற்ற விரும்பும் இருபகுதியினருடனும் கலந்துரையாடி, சன்மானம் பெறும் நோக்குடன் அக்கருமம் நிறைவேறுவதற்குக் காலாக இருப்பவர்.

தருமசங்கடம்- மாறுபட்ட இரு கடமைகளுள் எதைச் செய்வது என்று தெரியாமல் திண்டாடும் நிலை.

தலைமுறை- ஒருவர் பிறந்து மறையும் வரையுமுள்ள காலம்.

தற்குறிப்பேற்றம்- இயற்கையாய் நிகழும் நிகழ்ச்சிகளுக்குப் புலவன் ஒரு காரணத்தைக் கற்பித்துக் கூறும் அணி.

தற்சமம்- ஆரியத்திற்கும் தமிழுக்குமுரிய பொது எழுத்துக்களால் விகாரமின்றித் தமிழில் வழங்கும் வடசொல்.

தற்பவம்- ஆரியச் சிறப்பெழுத்துக்கள், தமிழ் எழுத்துக்களாக விகாரப்பட்டுத் தமிழில் வழங்கும் வடசொல்.

தற்புகழ்ச்சி- தன்னையே ஒருவன் புகழ்ந்துகொள்ளல்.

**தன்மை நவிற்சி-** ஒரு பொருளை இயற்கையில் உள்ளவாறே அழகுபடக் கூறும் அணி.

**தாசமார்க்கம்-** இறைவனை ஆண்டானாகவும் தன்னை அடிமையாகவுங் கருதி வழிபடும் முறை.

**தாய்மொழி-** குழந்தை முதன்முதல் தாயிடமிருந்து கற்றுக்கொள்ளும் மொழி.

**தாலாட்டு-** குழந்தையை உறங்கச் செய்வதற்குத் தாய் முதலியோர் பாடும் பாட்டு.

**திணைக்களம்-** ஒரு துறையைச் சேர்ந்த வேலைத்தொகுதி செய்யப்படும் இடம்.

**திருப்பணி-** கடவுளுக்கு அல்லது கடவுள் உறையும் கோயிலுக்குச் செய்யப்படும் தொண்டு.

**திறைசேரி-** அரசின் நிதி சம்பந்தமான விடயங்கள் செயற்படுத்தப்படும் இடம்.

**தீபகற்பம்-** மூன்றுபக்கமுங் கடலாற் சூழப்பட்ட நிலப்பகுதி.

**தீர்க்கதரிசி-** எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும்ஆற்றல் படைத்தவன்.

**தீர்ப்பு-** நீதி விசாரணையின் பின் கூறப்படுவது.

**தீவு-** நான்குபக்கமும் நீரினாற் சூழப்பட்டு நடுவே இருக்கும் சிறிய நிலப்பரப்பு.

**தூசிப்படை-** போர்க்களத்திலே அணிவகுப்பில் முதல் வரிசையிலே நிற்கும் படை.

**தூதுவர்-** ஒரு நாட்டின் பிரதிநிதியாக இன்னொரு நாட்டிலிருந்து இருநாடுகளுக்குமிடையில் நல்லுறவை வளர்க்கும் பணியில் ஈடுபடுவதுடன் தன் சொந்த நாட்டு நலன்களையும் கவனித்துவரும் உயர்தர அதிகாரி.

**தேசாபிமானி-** தான் பிறந்த நாட்டை நேசிப்பவன்.

**தேசிய இனம்-** மொழி, மதம் முதலானவைகளுள் ஒன்றினாலோ பலவற்றினாலோ இணைந்து ஒரே மக்கள் என்ற எண்ணம் வலுப்பெற்ற சமுதாயம்.

**தேசியமயம்-** ஒரு நாட்டின் வருவாய்ச் சாதனங்களைச் சுவீகரித்து அவற்றை நிருவகிப்பதில் அரசும் மக்களும் பங்குகொள்ளும் நிலை.

**தேசியவாதி-** தமது நாட்டை முழுமையாகக் கணித்து நாட்டுப் பற்று மிக்கவராய் வாழ்பவர்.

**தேடற்கட்டளை-** ஓர் இடத்தில், ஆட்களையோ, சாதனங்களையோ, பிரசுரங்களையோ தேடுதற்கு நீதிமன்றம் விடுக்கும் ஆணை.

**தேவராளன்-** வேண்டும்போது தெய்வம் ஏறப்பெற்று ஆடுபவன்.

**தொடராமுறி-** ஒப்பந்த அடிப்படையில் இருந்த இருவர், தமக்கிடையே எவ்வித தொடர்பும் இல்லையென்பதை எழுத்தில் உறுதிப்படுத்துஞ் சாதனம்.



**தொழுவம்-** மாடுகள் கட்டப்படும் இடம்.

**தோப்பு-** ஓரின மரங்கள் செறிந்து வளர்ந்திருக்கும் இடம்.

**நங்கூரம்-** கப்பல் முதலியவற்றை நிறுத்துவதற்குப் பயன்படுத்தும் இரும்பாலான, நுனிகளுடன் கூடிய ஒருவகைக் கருவி.

**நடுகல்-** போரில் வீரமரணம் எய்திய போர்வீரரின் பெயரையும் புகழையும் எழுதி நாட்டப்படுங் கல்.

**நடுக்கட்டல்-** ஒரு நீதி மன்றத்தில், பணம் பெறுநராகத் தீர்ப்புப் பெற்ற ஒருவர், கடன் கொடுக்கவேண்டியவரின் அசைவுள்ள அசைவற்ற பொருள்களையோ ஆதனங்களையோ விற்றுப் பணத்தை அறவிடுவதற்காக அவற்றைச் சட்டமூலம் பொறுப்பேற்றல்.

**நடைமுறை வைப்பு-** வங்கியில் நாளாந்தக் கொடுக்கல் வாங்கலுக்காக இடப்படும் வைப்புப் பணம்.

**நரகம்-** பாவஞ் செய்தவர் இறந்தபின் துன்பம் அனுபவிப்பதற்காக அடையும் இடம்.

**நல்லெண்ணத் தூதுக்குழு-** ஒரு நாட்டின் அரசுப் பிரதிநிதிகளாய் மற்றொரு நாட்டுடன் நல்லுறவை வளர்க்கும் பணியை மேற்கொண்டு செல்லும் தூதுக்குழுவினர்.

**நன்கொடை-** ஒருவர் மற்றொருவர்மீது கொண்ட பற்றும் பாசமுங் காரணமாக ஆவணம் பிறப்பித்துக் கொடுக்கும் பணம் முதலியன.

**நன்செய்-** நெல் விளையும் வயல். (செய் - வயல்)

**நாடோடி-** எந்த இடத்திலும் நிலையாக இராமற் பல இடங்களுக்குச் சென்று வாழ்க்கை நடாத்துபவன்.

**நாத்திகன்-** கடவுள் இல்லையென்ற கொள்கையுடையவன்.

**நாளங்காடி-** காலையிலாயினும் பகலிலாயினுங் கூடுஞ் சந்தை.

**நிகண்டு-** சொற்களின் பொருளைத் திரட்டித்தரும் செய்யுள் வடிவில் அமைந்த நூல்.

**நிந்தகம்-** அரசரும் செல்வருந் தமக்குக்கீழ்ச் சேவை புரிவோர்க்கு வழங்கும் நிலம்.

**நிருபர்-** பத்திரிகைகளுக்குச் செய்திகளைத் தேடிச் சேர்த்து வழங்குபவர்.

**நிருமாலியம்-** கடவுளுக்கு நிவேதிக்கப்பட்ட பொருள்களும், அவனை அர்ச்சித்த பொருள்களும்.

**நிலுவை-** செலுத்திய தொகையை நீக்கி இன்னுஞ் செலுத்தப்பட வேண்டிய தொகை.

**நிறைமொழி-** அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் அருள்மொழி.

**நூதனசாலை-** மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகப் புராதனப் பொருள்களைப் பாதுகாத்து வைக்கும் இடம்.

**நூலகம்-** வாசிப்பதற்காக நூல்களைத் தொகுத்து வைத்திருக்கும் இடம்.

நூற்றாண்டுவிழா- நூறாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா.
நான்முகம் (முன்னுரை)- நூலாசிரியர், தமது நூலைப்பற்றி நூல் முகப்பில் எழுதும் உரை.
நெடுங்கணக்கு- தமிழிலுள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துகளும் ஒழுங்குமுறைப்படி அமையப்பெற்றது.
நெய்தல்- கடல் சார்ந்த இடம்.
நைட்டிகன்- ஆயுள் முழுவதும் பிரமசரியவிரதங்காத்து வாழ்பவன்.
நைவேத்தியம்- கடவுளுக்கு நிவேதிக்கும் அன்னம், பணிகாரம் முதலியன.
நொதுமலர்-பகையுமின்றி நட்புமின்றி நடுநிலையில் நிற்கும் அயலோர்.
நொத்தாரிசு- நிலபுலம் சம்பந்தமான ஆவணங்களை எழுதுவதற்கு அரச அனுமதிபெற்ற உத்தியோகத்தர்.
பகற்கனவு- மனம் ஒருவழிப்படாது இன்பமான கற்பனை உலகில் சஞ்சரிக்கும் நிலை.
பகிரங்கப்படுத்தல்- ஒரு விடயத்தைப் பலரறிய வெளிப்படுத்தல்.
பச்சாத்தாபம்- ஒருவன், தான் செய்தது பிழையென அறிந்து வருந்துதல்.
பஞ்சமாபாதகம்- கொலை, களவு, கள், பொய், குருநிந்தை என்னும் பாவங்கள்.
பஞ்சாங்கம்- திதி, வாரம், கரணம், யோகம், நட்சத்திரம் என்னும் ஐந்து உறுப்புக்களையும் பற்றிய விபரங்களைத் தரும் நூல்.
பஞ்சாயம்- உறுப்பினர் ஐவரைக்கொண்ட நியாய சங்கம்.
பஞ்சாயுதம்- காத்தற் கடவுளாகிய திருமாலின் ஐவகை ஆயுத உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ள, சிறுவர் அணியும் ஆபரணம்.
படியெடுத்தல்- யாதாயினும் ஒன்றன் சொரூபத்தை அது கிடந்தவாறே எடுத்தமைத்தல்.
படைக்கலச்சேவிதர்- சபாநாயகரின் வருகைக்கு முன்னோடியாகக் கட்டியக்கோலுடன் பாராளுமன்றத்துக்கு வரும் உத்தியோகத்தர்.
பட்டமளிப்பு விழா- பல்கலைக்கழகத்திலே பட்டம் பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்குவது தொடர்பாக எடுக்கப்படும் விழா.
பட்டாபிஷேகம்- அரசியல் அதிகாரத்தைக் கொடுத்து முடிசூட்டுதல்.
பட்டிமண்டபம் (பட்டிமன்றம்)- அறிஞர்கள் பலர் கூடிக் கலையை ஆராய்தற்கும் வாது புரிதற்குமுரிய மண்டபம்.
பணவீக்கம்- ஒரு நாட்டிலுள்ள பொருள்களின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாகவும், படிப்படியாகவும் கணிசமான அளவு அதிகரித்துச் செல்லும்நிலை.



பண்டமாற்று- பொருள்களுக்குப் பொருள்களைக் கொடுத்து வாங்கும் முறை.
பதிப்புரிமை- சட்டப்படி நூலாசிரியருக்கோ வேறு ஒருவருக்கோ உள்ள பிரசுர உரிமை.
பதிப்புரை- ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலைப்பற்றி எழுதும் உரை.
பதிவேடு- அரசாங்கத் திணைக்களங்கள், தாம் மேற்கொண்ட விடயங்கள் தொடர்பான சம்பவங்களை எழுதிப் பாதுகாத்து வைக்கும் புத்தகம்.
பத்ததி- கோயிற் கிரியைகளை முறைப்படுத்தி விளக்கிக் கூறும் விதி நூல்.
பயங்கரவாதத்தடைச்சட்டம்- வன்செயலை விசாரித்துத் தண்டிப்பதற்கென அரசாங்கத்தால் விசேடமாக இயற்றப்பட்ட சட்டம்.
பரிசம்- மணமகன், மணமகளின் பெற்றோருக்குக் கொடுக்கும் பரிசிற் பொருள்.
பரிவேடம் (ஊர்கோள்)- சூரியசந்திரர்களைச் சுற்றித் தோன்றும் ஒளி வட்டம்.
பரோபகாரி- பிறருக்கு வாரி வழங்கி உதவுபவன்.
பல்கலைக்கழகம்- பட்டப்படிப்புக்காகப் பல கலைகளையுங் கற்பிக்கும் நிலையம்.
பல்லக்கு (சிவிகை)- அரசர் முதலியோர் அமர்ந்திருக்க மனிதர் காவிச் செல்லும் வாகனம்.
பழமொழி- தொன்றுதொட்டு வழங்கிவரும் வாக்கியம்.
பவளவிழா- எழுபத்தைந்து ஆண்டுகள் முடிவடையும்போது எடுக்கப்படும் விழா.
பழிவாங்குதல்- தீமைக்குத் தீமை செய்தல்.
பற்றாக்குறை- தேவைக்கேற்ற அளவு பொருள்கள் கிடையாதிருக்கும் நிலை.
பற்றுச்சீட்டு- பணத்தையோ பொருளையோ பெற்றுக் கொண்ட தொகையைக் குறிக்கும் பத்திரம்.
பன்னசாலை- முனிவர்கள் வசிப்பதற்கு இலை, தழை, கொண்டு வேயப்பட்ட குடிசை.
பாசறை (பாடிவீடு)- பகைமேற் சென்ற அரசன், தன் படையுடன் தங்கியிருக்கும் இடம்.
பாஞ்சசன்னியம்- சலஞ்சலம் என்னும் பெயரையுடைய ஆயிரம் சங்குகளின் நடுவேயிருக்கும் உயர் சாதிச்சங்கு.
பாதுகாவலர்- பெற்றோர் இல்லாத பிள்ளைகளின் சொத்தைப் பராமரித்து, அவர்கள் பருவம் வரும்வரை அவர்களுக்குப் பாதுகாப்பாகக் கடமையாற்றும் ஒருவர்.

பாராளுமன்றம்- மக்கள் பிரதிநிதிகள் கூடிச் சட்டங்கள் இயற்... நாட்டை ஆளும் மன்றம்.

பார்வைமிருகம்- காட்டிலுள்ள தன்னின மிருகங்களைப் பிடிப்... தற்கு உதவியாகக் கொண்டுசெல்லும் பழக்கப்பட்ட மிருகம்.

பிடியாணை- கட்டளை வழங்கப்பட்டும் நீதிமன்றத்துக்குச் சமுகமளி... காதிருந்த ஒருவரைக் கைது செய்து வருமாறு நீதிபதி விடுக்கும் கட்டளை.

பிடிவாதம்- மற்றவர் கூறும் நியாயங்களுக்கு விட்டுக்கொடுக்கா... தான் கொண்ட கொள்கையே சரியென வாதிடுங் குணம்.

பிதிரர்- தந்தைவழி மூதாதையர்.

பிதிர்க்கடன்- இறந்தவரைக் குறித்துச் செய்யப்படும் சிராத்த... முதலிய கடமைகள்.

பிரசாதம்- கடவுளுக்கு நிவேதித்த பொருளும், குரு முதலானோ... உண்டு எஞ்சிய உணவும்.

பிரசாரம்- ஒரு விடயத்தைப் பலரும் அறியுமாறு பரப்புதல்.

பிரசித்தம்- ஒரு செய்தியைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளு... படி முரசு அறைந்து தெரிவிப்பது.

பிரசைகள்குழு- கிராமங்களிலே, நெருக்கடி காலங்களில் ஏற்படு... அசம்பாவிதங்களை அரசினருக்கும் ஆயுதப்படையினருக்கும் எடுத்... ரைத்து நிவாரணம் பெறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள சபை.

பிரதிநிதி- ஒரு குழுவினருக்குப் பதிலாகக் கருமமாற்றுவதற்கு நி... மிக்கப்படும் ஆள் அல்லது தெரிவு செய்யப்படும் ஆள்.

பிரமசாரி- கற்று விரதங்காத்து விவாகம் இன்றி இருப்பவன்.

பிரமசாரிணி- கற்று விரதங்காத்து விவாகம் இன்றி இருப்பவ...

பிராணயாமம்- மனிதர், தமது சுவாசத்தை அடக்கியாளும் சுவா... சப் பயிற்சி.

பிராயச்சித்தப் - பாவத்தை நீக்குவதற்கு விதித்த விரதநியமம், சா... முதலியன.

பிரியாவிடை- உத்தியோகத்தர் ஒருவர், இடமாற்றம் பெற்று... செல்லும்போது அவருடைய ஆதரவாளர்களால் எடுக்கப்படும் விழ...

பிள்ளைத்தமிழ்- தெய்வத்தையோ பெரியோரையோ பிள்ளையா... கற்பனைசெய்து, பிள்ளையின் பல பருவங்களையும் வருணித்துப் பா... பிரபந்த வகை.

புரட்சி- நிலைபெற்ற ஆட்சியை அல்லது அரசியல் முறையை வலி... கவிழ்ப்பதற்கு மக்கள் முனைந்து நிற்றல்.

புருடார்த்தம்- அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்... பொருள்கள்.

புரோகிதர்- சமயச் சடங்குகளை நிறைவேற்றி வைக்கும் குரு.

புறங்காட்டல்- போரிலே தோற்றுப் பின்வாங்கி ஓடுதல்.



...ங்கூறல்- ஒருவர் இல்லாதபோது அவரைப்பற்றி இழிவாகக் ...தல்.

...ஞ்சேரி- நகருக்கு வெளியே மக்கள் வாழுமிடம்.

...ந்துரை- இல்லது இனியது நல்லதை அலங்கரித்துக் கூறுதல்.

...செய்- நெல் தவிர்ந்த வேறு தானியங்கள் பயிரிடப்படும் வயல்.

...க்கண்ணாடி- சிறு பொருளைப் பெரும் பொருளாகக் காட்டுங் ...ணாடி.

...லை- சந்திரன் முழுக்கலையுடனும் பொலிவுற்றுத் தோன்றும் ...ம்.

...வக்கிரியை- மனிதன் கருவிலே தோன்றி இறக்கும்வரை நிக... கிரியைகள்.

...வபக்கம்- அமாவாசை கழிந்த பிரதமை முதல் பூரணையீறுக ...ள காலம்.

...ரும்பான்மையினர்- ஒரு நாட்டிலே வசிக்கும் மக்களுள் ...ரீதியாகவோ மதரீதியாகவோ கூடியதொகையினராக உள்ளவர்கள்.

...ராயர்- கத்தோலிக்கத் திருநெறியினரிடையே ஒரு மறைமாவட் ...த்துக்குட்பட்ட திருத்தந்தையர்களுக்கு மேற்பட்டவராய் இருக்கும் ...ட்குரு.

...ளர்- ஓர் அமைப்பின் பிரதிநிதியாக நிகழ்ச்சி ஒன்றிலே கலந்து ...ள்பவர்.

...ய்த்தேர்- கடும் வெயிற் காலத்தே வெளிகளில் நீர் ஓடுவது ...லத் தெரியும் ஒருவகைப் பொய்த்தோற்றம்.

...ம்பேசுதல்- விற்பவரும் வாங்குபவரும் விலைபற்றி ஓர் உடன் ...டுக்கு வருவதற்காகப் பேசுதல்.

...ேடு- ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களிலும் ஏற்படும் வரவு ...லவுப் பதிவுகளைப் பதிவு செய்யும் பல்வேறு இனக்கணக்குகளை உள் ...க்கிய பிரதான புத்தகம்.

...ட்டணி- பொருள்களைச் சீலையால் மூடிப்பொதிந்துகட்டப்பட்ட ...

...துவியல்- பொது மக்களுக்காக அரங்கிலே ஆடப்படுங் கூத்து.

...துவுடைமை- பொதுவாக அனைத்து வளங்களையும், சிறப்பாக ...த்திச் சாதனங்களையும் அரசின் உடைமையாக்கி, எல்லோரும் ...கம் தகுதிக்கேற்ப உழைத்து வாழும் நிலை.

...ய்கை- மனிதர் ஆக்காத நீர்நிலை.

...ழிப்புரை- செய்யுளின் கருத்தை மாத்திரம் தொடுத்து எழு... உரை.

...மை- ஒருவனது கல்வி, செல்வம், அதிகாரம் என்பவற்றைக் ...மனம் புழுங்கும் நிலை.

பொன்விழா- ஐம்பது ஆண்டுகள் முடிவடையும்போது எடுக்கப்படும் விழா.

போராளர்- ஒரு குறித்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்குப் போர்க் கோலம் பூண்டு நிற்போர்.

போலி- ஒரு பொருளோடு உருவம் முதலியவற்றால் ஒப்புமை உடைய வேறொரு பொருள்.

பௌராணிகர்- புராணக் கதைகளைச் சுவைபடச் சொல்லிப் பிரசங்கஞ் செய்பவர்.

மங்கலியம் (தாலி)- திருமணஞ் செய்யும்போது பெண்ணின்கழுத்திலே கணவன் தரிக்கும் அணி.

மஞ்சரி- ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து.

மதிப்பீடு- ஒரு பொருளின் பெறுமானம், தொகை, நிறை முதலியன பற்றிய அல்லது ஒரு பொருளின் தன்மை பற்றிய அண்ணளவான கணிப்பு.

மத்திய அரசாங்கம்- தேசியரீதியாக எல்லோருக்கும் பொதுவான விவகாரங்களில் இறைமையைச் செலுத்தும் அரசாங்கம்.

மத்தியஸ்தர்- பல்வேறு போட்டிகளிலும் தீர்ப்பு வழங்கும் நடுவர்.

மந்திரம்- நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி.

மந்திராலோசனை- அரசியல் விடயங்கள் குறித்து அமைச்சர் முதலியோர் செய்யும் அதிமுக்கிய ஆலோசனை.

மரணவிசாரணை அதிகாரி- திடீரென ஏற்படும் மரணத்துக்கான காரணம் முதலியவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அரசினரால் நியமிக்கப்பட்டவர்.

மரபு- தொன்று தொட்டு வழகிவரும் முறைமை.

மரபுத்தொடர்- நேர்ப்பொருளைவிட்டு இலக்கணையாற் குறிப்புப் பொருளை உணர்த்தி நிற்கும் தொடர்.

மருதம்- வயல் சார்ந்த இடம்.

மலடி- மணம் புரிந்தும் பிள்ளையில்லாது இருப்பவள்.

மழலை- குழந்தையின் பொருள் விளங்காத மென்மொழி.

மறுப்பாணை- ஒரு பிரேரணையையோ சட்டத்தையோ நிறைவேற்ற முடியாதவாறு தடைசெய்து நிராகரிக்குஞ் சட்டம்.

மற்போர்- ஆயுதங்களின்றி உடல் வலிமையால் செய்யும் போர்.

மனக்கிளர்ச்சி- மனம் கலவரப்பட்டுத் தோன்றும் சிக்கலான அனுபவம்.

மனித உரிமைகள் சாசனம்- ஒரு சனநாயகநாட்டு மக்களுக்குள்ள அடிப்படைச் சுதந்திரங்களைத் தெளிவாக எடுத்துக் கூறுவது.

மாசிகம்- இறந்தவரைக்குறித்துமாசந்தோறும்செய்யப்படுங்கிரியை.

மாசிகை- மாசம் ஒருமுறை வெளிவரும் பத்திரிகை.

மாராயம்- அரசரால் செய்யப்படுஞ் சிறப்பு.



மாலுமி- கப்பலைச் செலுத்துபவன்.

மானியம்- அரசர்கள் தமக்குக்கீழ் வாழ்வோர்க்குச் சன்மானமாக விடும் நிலம்.

முகமன்- ஒருவர் முன்னிலையில், அவரைப் பற்றிப் புகழ்ந்து கூறல்.

முகவர் நிறுவனம்- வெளி நாடுகளுக்குச் செல்வோர்க்கு வேலை வாய்ப்பையும் பிறவசதிகளையுஞ் செய்து கொடுக்கும் தாபனம்.

முகாமி- ஒரு கருமத்தை மேற்பார்வையிட்டு நடாத்துவதற்கு அதிகாரம் பெற்றவர்.

முதலீடு- வாணிகம் முதலியன செய்வதற்கு இடும் மூலதனம்.

முதலுதவி- விபத்துக்களிற் சிக்கியவர்களுக்கு உடனடியாக அளிக்கப்படுஞ் சிகிச்சை.

முதுசொம்- பிதிர் வழியாக வந்த சொத்து.

முத்துவிழா (அமுதவிழா)- எண்பது ஆண்டுகள் முடிவடையும் போது எடுக்கப்படும் விழா.

முல்லை- காடு சார்ந்த இடம்.

முறைப்பாடு- தீர்வு காணும் தகுதியுடையவருக்கு இன்னலுற்ற ஒருவர் தமது நிலையை எடுத்துச் சொல்லுதல்.

முற்றுகை- ஒரு நாட்டுக்கு வெளியிலிருந்து உணவு முதலிய எவ்வகைப் பொருளுங் கிடையாதவாறு தடுத்து, அந்நாட்டைப் படை கொண்டு நாற்புறமுஞ் சூழ்ந்து நிற்றல்.

முனை- கடலுள் நீண்டிருக்கும் நிலப்பகுதி.

மூலவளம்- ஒரு நாட்டுக்கு இயற்கையாய் அமைந்த செல்வங்கள்.

மெய்க்காப்பாளர்- அரசன் ஜனாதிபதி முதலானவர்களுக்குத் தீங்கு ஏற்படாவண்ணம் காப்பவர்கள்.

மெய்க்கீர்த்தி- செப்பேட்டிலேனும் கல்லிலேனும் செதுக்கப்படும் புகழ்மொழி.

மெய்ப்பாடு- உள்ளத்திலே தோன்றும் உணர்ச்சிகளை உடலுறுப்புக்களிற் பிரதிபலித்தல்.

மேம்பாலம்- பாதசாரிகள் இடையூறின்றிக் கடப்பதற்கு வசதியாக வாகனநடமாட்டம் மிக்க, பெரிய வீதிகளின் குறுக்கே உயரத்தில் அமைக்கப்படும் பாலம்.

மேலொட்டி- மற்றொரு பொருளைத் தனது இருப்பிடமாக வைத்துக் கொள்வதன்றி அதனினின்றும் உணவை உறிஞ்சி வாழாத தாவரம்.

மையவாடி- இஸ்லாம் சமயத்தவர் பிரேதங்களை அடக்கஞ் செய்யும் [illegible]

மோனை- செய்யுளிலே சீர்களின் முதலெழுத்து ஒன்றிவரவும் [illegible] வசனத்திலே வாக்கியச் சொற்களின் முதலெழுத்து ஒன்றிவரவும் தொடுப்பது.

**யூரிமார்-** மேல்நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் போது நீதிபதிக்கு உதவும் முறையில் விசாரணையைக் கவனித்துத் தங்கள் தீர்ப்பைக் கூறும் எழுவரைக் கொண்ட ஒரு குழுவினர்.

**வகுப்புவாதி-** ஒரு நாட்டிலே, தமது பிரிவின் அல்லது இனத்தின் நலனுக்காக உணர்ச்சிவசப்பட்டு இயங்குபவர்.

**வங்கி-** மக்களின் சேமிப்பை ஊக்குவித்தல், பணத்தை உருவாக்கல் கடன் வழங்கல், நாணயமாற்றுச் செய்தல் போன்ற வணிகநெறிக்கு ஆதாரமான சகல தொழிற்பாடுகளையுஞ் செய்யுமிடம்.

**வஞ்சிப்போர்-** மண்ணாசை கொண்டு ஓர் அரசன் மற்றோர் அரசன் மீது தொடுக்கும் போர்.

**வஞ்சினம்-** ஒருவர், தாம் மேற்கொண்ட ஒரு கருமத்தை நிறை வேற்றுதுவிடின் இன்னது செய்வேன் என்று அறுதியிட்டுரைத்தல்.

**வடக்கிருத்தல்-** உயிர்துறக்கும் துணிவுடன் வடதிசை நோக்கி ஊண் இன்றி இருத்தல்.

**வட்டமேசை மகாநாடு-** ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழி வகைகள் குறித்து ஆலோசித்து முடிவு எடுப்பதற்காக, பிரச்சினையோடு தொடர்புள்ள சகல கட்சிகளினதும் பேராளர்கள், சமத்துவமாகக் கலந்துகொள்ளும் கூட்டம்.

**வண்ணமகள்-** அரச மகளிர்க்கு அல்லது அவரையொத்த செல்வ மகளிர்க்கு அலங்காரஞ் செய்யும் பெண்.

**வதந்தி-** உண்மையை உறுதிப்படுத்தாமலே ஊர்மக்கள் பரப்பும் ஐயப்பாடான செய்தி.

**வர்த்தமானி-** அரசினரது அறிவித்தல்களையும், விளம்பரங்களையும் பிறவற்றையும் தாங்கி வெளிவரும் அரசாங்கப் பத்திரிகை.

**வரகவி-** இறையருள் பெற்று எடுத்த எடுப்பிலேயே கவிபாடும் ஆற்றல் உள்ளவன்.

**வரைபடம்-** கட்டடம் முதலியவற்றின் அமைப்புப் படம்.

**வரைவல்லாளர்-** கட்டடக் கலைத்துறையிலே கட்டட அமைப்புப் படம் வரையும் அறிஞர்.

**வலம்வருதல்-** திவ்வியமான ஒரு பொருளை வலப்பக்கமாகச் சுற்றி வருதல்.

**வளர்முகநாடுகள்-** அந்நியர் ஆட்சியிலிருந்து அண்மைக்காலத்தில் விடுதலைபெற்றுப் பல்வேறு துறைகளிலும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் நாடுகள்.

**வள்ளல்-** யாவருக்கும் வரையாது கொடுக்குந் தன்மை வாய்ந்தவன்.

**வள்ளைப்பாட்டு-** மகளிர், நெல் முதலியன குற்றும்போது பாடும் பாட்டு.

**வாகடம்-** மருத்துவ முறைகளைக் கூறும் ஏட்டுப் பிரதி.

**வாகைசூடல்-** ஒரு கருமத்தில் வெற்றிபெறுதல்.



**வாக்காளர்-** தேர்தலில் வாக்களிக்கும் உரிமையுடையவர்.

**வாக்குரிமை-** தேர்தலில் ஒருவரைத் தெரிவுசெய்யும் உரிமை.

**வாடகை (வாடை)-** பிறருடைய வீடு, கடை, வாகனம் மற்றும் பொருள்களைப் பயன்படுத்துவோர் உரிமையாளருக்குச் செலுத்தும் பணம்.

**வாயாடி-** வாக்குச் சாதுரியமுள்ளவன்.

**வாய்க்கரிசி-** பிரேதத்தின் வாயிலிடும் அரிசி.

**வார்நாமம்-** கப்பலிலோ புகைவண்டியிலோ சரக்கு ஏற்றப்பட்டதென்பதற்கு அத்தாட்சியாக உரிய அதிகாரிகளாற் கொடுக்கப்படும் சீட்டு.

**விகடகவி-** நகையும் பரிகாசமும் பொருந்தக் கவி புனையும் ஆற்றல் படைத்தவன்.

**விகாரை-** புத்த சமயிகளின் வழிபாட்டிடம்.

**விக்கிரகம்-** பஞ்சலோகங்களினாலோ கல்லிலோ வடிக்கப்பட்ட கடவுளின் திருவுருவம்.

**விசா-** ஒருநாட்டுப் பிரசை இன்னொருநாட்டில், தற்காலிகமாகத் தங்குவதற்குப் பெற்றுக்கொள்ளவேண்டிய அனுமதி.

**விடாக்கண்டன்-** பிறர் எவ்வாறு கூறினாலும், தான் எடுத்துக் கொண்ட காரியத்தைச் சரியென்று சொல்லிப் பிடிவாதம் செய்பவன்.

**விதவை-** கணவனை இழந்தவள்.

**விதி-** ஒருவன் முற்பிறப்புக்களிலே செய்த நல்வினை தீவினைகளின் பயன்களைப் பிற்பிறப்புக்களில் அனுபவிக்கவேண்டிய நியதி.

**விமானி-** விண்வெளியில் வானவூர்தியை இயக்குபவன்.

**விலங்ககம்-** விலங்கினங்களைக் காட்சிக்காக வைத்துப்பேணும் இடம்.

**விலங்குப்புகலரண்-** விலங்கினங்கள் சுயமாக வாழ்வதற்கென்று அமைக்கப்பட்ட தனியிடம்.

**விழிப்புக்குழு-** கிராமத்தில் ஏற்படுகின்ற சட்டவிரோதமான செயற்பாடுகளை அறிந்து, அவற்றைச் செய்வோரைச் சட்டத்தின் பிடியிற் சிக்கவைத்து, கிராமத்தில் அமைதியையும் சீரான வாழ்க்கை முறையையும் உண்டாக்கும் குழுவினர்.

**விளக்கமறியல்-** குற்ற விசாரணைக்காக ஒருவரைப் பாதுகாப்பில் வைத்தல்.

**வெகுமானம்-** இழந்த பொருளைத் தேடிப்பெற்றுக் கொடுத்த ஒருவருக்கு வழங்கப்படுவது.

**வெளிநடப்பு-** அங்கத்தவர்களோ வேலையாட்களோ தத்தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக, நம்பிக்கை இழந்து, ஆவேசத்துடன் குறித்த இடத்தைவிட்டுத் திடீரென வெளியேறும் செயல்.

**வெள்ளிவிழா-** இருபத்தைந்து ஆண்டுகள் முடிவடையும்போது எடுக்கப்படும் விழா.

வெள்ளிடி- மழைக்குணம் இல்லாமல் உண்டாகும் இடிமுழக்கம்.
வெள்ளெழுத்து- எழுத்து விளக்கமாகத் தெரியாமைக்கு ஏதுவான பார்வைக்குறைபாடு.
வெள்ளைக்கவி- பொருளாழமும் சுவையுமில்லாத பாட்டு.
வெள்ளைக்கோட்டி- பயனில்லாதவற்றைப் பேசும் அறிவில்லாதவர் கூட்டம்.
வெள்ளையறிக்கை- தகவலின்பொருட்டு ஆட்சியாளர் பூர்வாங்கமாக வெளியிடும் அறிக்கை.
வெள்ளோட்டம்- புதிதாகச் செய்யப்பட்ட தேர், கப்பல் என்பவற்றை முதன்முதலாகச் செலுத்திப்பார்த்தல்.
வேட்பாளர்- தேர்தலொன்றில், தமது கொள்கைகளை விளக்கித் தம்மை ஆதரிக்கும்படி வாக்காளரை வேண்டிநிற்பவர்.
வேத்தியல்- அரசர், அமைச்சர் முதலிய உயர்வகுப்பினர் கண்டு களித்தற்காக ஆடப்படுங் கூத்து.
வைரவிழா (மணிவிழா)- அறுபது ஆண்டுகள் முடிவடையும் போது எடுக்கப்படும் விழா.

| | |
|---|---|
| அழைப்பாணை | - Summons |
| ஆட்கொணர்வுமனு | - Writ of Habeas corpus |
| இடைக்கால உத்தரவு | - Interim Injunction |
| இடைக்காலத் தடை உத்தரவு | - Injunction |
| ஒத்திவைப்புத் தண்டனை | - Suspended sentence |
| ஒப்புதல் வாக்குமூலம் | - Confession |
| ஒற்றி | - Usufructuary mortgage |
| கட்டாணை | - Writ of Mandamus |
| தடுப்புக்காவற்சட்டம் | - Detention Order |
| தொடராமூறி | - judicial Separation |
| பிடியாணை | - Warrant |
| மறுப்பாணை | - Power of Veto |
| விளக்கமறியல் | - Remand |

அச்சுப்பதிவு:
பாலா அச்சகம். காரைநகர். போன் 24

நூ 9449

# காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.

க. பொ. த. (சா / த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்ட நூல்கள்.

| | | ரூ. ச |
|---|---|---|
| 1. | தொடர்மொழிக்கு ஒரு மொழி | 7 - 0 |
| 2. | மதிப்பீட்டுப் பயிற்சிக் கோவை (தமிழ் மொழி - பகுதி I) | (அச்சில் |
| 3. | பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு (பழைய பாடத்திட்டம்) | 8 - 5 |
| 4. | தமிழ் இலக்கிய வினவிடை (பழைய பாடத்திட்டம்) | 6 - 0 |

## நூற்பிரதிகள் கிடைக்குமிடங்கள்.

1. யாழ்ப்பாணத்திலுள்ள புத்தகசாலைகள்.
2. தனலக்சுமி புத்தகசாலை, சுன்னாகம்.
3. சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை, சாவகச்சேரி.
4. மொடேண் ஸ்ரோர்ஸ், வவுனியா.
5. டானியல் புத்தகசாலை, 287, காலிவீதி, வெள்ளவத்தை.
6. இலங்கை மத்திய புத்தகசாலை, கொழும்பு வீதி, கண்டி.
7. பராசக்தி ஏஜென்சீஸ், 71/1, பிரதான வீதி, பண்டாரவளை.
8. சொடஸ் டெல், கல்முனை.